# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **ஈஸ்வரன்** | தொழில்: | |
| த.பெ: | **கருப்பனன்** | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**29.4.2026 OS.221/2019 வா.சா.2. ஈஸ்வரன்**

**<u>வாதிகள் தரப்பு முதல் விசாரணை</u>:**

1) நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்திரா தாக்கல் செய்துள்ள வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆண்டி அம்பலம் அவரது மகளுக்கு ஒரு ஆவணம் எழுதி வைத்தார் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் 11.09.2009 ம் தேதியிட்ட ஆவணமாகும். நான் மேற்படி ஆவணத்தில் திருப்புவனம் சார்பதிவகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து மேலராங்கியம் கிராமத்தில் உள்ளது.

2) எனது ஊருக்கும் மேலராங்கியம் கிராமத்திற்கும் 2 கிலோ மீட்டர் துாரம் இருக்கும். ஆண்டி அம்பலத்தை எனக்கு பிறந்தது முதல் தெரியும். மேற்படி ஆவணத்தில் வயல்சேரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு நபரும் சாட்சி கையொப்பம் செய்திருந்தார். மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியும்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1) நான் சாட்சி கையெழுத்திட்ட ஆவணத்தில் கண்ட சொத்தின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து காளியம்மாளுக்கு அவரது கொழுந்தனாரிடமிருந்து கிரையம் பெற்ற வகையில் பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். அய்யாவு அம்பலத்தின் மனைவி தான் காளியம்மாள் என்றால் சரிதான். காளியம்மாள் தாவா சொத்தை கிரையம் வாங்கிய பின்னர் ஆண்டி அம்பலத்திற்கு ஏதேனும் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் காளியம்மாள் தனக்கு எழுதி வைத்தாக சொல்லித்தான் ஆண்டி அம்பலம் அவரது மகளான இந்திராவுக்கு எழுதி வைத்தார்.

2) எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்தன் அடிப்படையில் எனக்கு சொந்தமாக இருந்து நான் எனது மகளுக்கு எழுதிக்கொடுக்கிறேன் என்ற வாசகம் நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் இருந்ததா என்றால் இருந்தது. நான் சாட்சி கையொப்பம் போட்ட ஆவணத்தில் கண்ட சொத்து அப்போது யார்

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.29 12:51:37 +0530

பெயரில் இருந்து வந்தது என்பதை நான் பார்த்தேனா என்றால் அவர் பெயரில் இருந்ததால் தான் பத்திரம் பதிய முடிந்தது இல்லையென்றால் பத்திரம் பதிய முடியாது. தாவா சொத்தைப் பொறுத்து ஆண்டிஅம்பலம் இந்திராவுக்கு எழுதி கொடுப்பதற்கு முன்பாகவே காளியம்மாள் ஆதித்தனார் கல்வி அறக்கட்டளைக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அப்படி இருந்தால் பத்திரம் பதிவு செய்திருக்க முடியாது.

3) நான் சாட்சி கையொப்பம் செய்த பத்திரத்தில் ஆண்டி அம்பலம் தனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்று தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை காளியம்மாளிடமிருந்து ஆண்டி அம்பலம் கிரையம் வாங்கிய சொத்து என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் கண்ட சொத்து ஆண்டி அம்பலம் பெயரில் தான் இருந்தது என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை சார்பதிவகத்தில் சமர்பித்ததை நான் நேரடியாகப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தில் பட்டா எண். 1445 என குறிப்பிடப்பட்டுள்ளது அந்த பட்டாவில் ஆண்டி அம்பலத்தின் பெயரே இல்லை என்றால் சரியல்ல.

4) ஆண்டி அம்பலத்திற்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் ஆண்டி அம்பலம் அவரது மகளுக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை போலியாக தாவா சொத்தைப் பொறுத்து உற்பத்தி செய்த ஆவணத்தில் நான் போலி ஆவணம் என்று தெரிந்து இந்திரா எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர் தகப்பனார் எழுதி வைத்து போலி ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்திரா எனது உறவினர் என்றால் எனக்கு துாரத்து சொந்தமாகும். இந்திரா கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணமே சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

(**மறுவிசாரணை இல்லை**).

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.29 12:51:46 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam